சக்ரவர்த்தினி.

"கேடில் விழுச்செல்வங் கல்வி ஒருவநுக்கு
மாடல்ல மற்றை யவை."

VOL. VI. தொகுதி ௬. | MADRAS, JULY 1911. சென்னை, ஜூலைமீ 1911. | NO. 12, பகுதி ௧௨,

ஐந்தாவது ஜியார்ஜ் சக்ரவர்த்தியாரின் மகுடாபிஷேக வைபவம்.

———(*)———

சென்ற ஜூன்மீ 22-ந் தேதியன்று இந்த மகுடாபிஷேக
உற்சவம் லண்டன் மாநகரத்தில் நடைபெற்றது. சென்ற
மாதமே இவ்விஷயத்தைப் பத்திரிகையில் வெளியிட அவகாச
மில்லாமற் போனமையால் இம்மாதம் வெளியிடலானோம். இந்த
மகுடாபிஷேக வைபவம் நாமெல்லோராலும் சென்ற ஒருவருட
காலமாக எதிர்பார்க்கப்பட்டு வந்தது. இது எவ்வுலகமும் புகழ
வெகு சிறப்பாக நடைபெற்றது. இதுவரையில் எவருக்கும்
இம்மாதிரி நடைபெற வில்லையெனக்கேட்டு மகிழ்கிறோம். இவர்
நமது விக்டோரியா மகாராணியவர்களைப் போலவே கருணை
யுடையவரென்பதை இவர் நம்மிந்தியாவைப் பற்றிப் பன்முறை
பேசியதிலுமிருந்து அறிகிறோம். இவருக்கு பிருதிவி கண்டத்
தில் 4-ல் ஒரு பங்கு சொந்தமாயுள்ளது. ஐந்தில் ஒருபங்கு
ஜனத்தொகை தம்மைப் பணியப்பெற்ற புண்ணிய சீலன். உல
கத்தில் மற்றெந்த சக்ரவர்த்திக்கும் இவ்வளவு செல்வமும்
பூபாகமும் இல்லை.

லண்டன் மாநகரமோ ஐம்பது லட்சம் ஜனங்களடங்கிய ஒரு பெருந்தேசம். இது சாதாரணமாகவே வெகு நெருக்கமாக விருக்கும். அதுவும் உலகத்தில் எப்பாகத்திலும் தமது ஆட்சி செலுத்திவரும் சக்கரவர்த்தியவர்களுக்கு நடக்கும் மகுடாபிஷே கத்தைப்பற்றிக் கேட்கவேண்டுமா?

இந்தப் பட்டாபிஷேகத்தை யுத்தேசித்துத் தேசமன்னர்களின் பிரதி நிதிகளும் குடியேற்ற நாடுகளின் முக்கிய மந்திரிகளும் இந்தியாவிலிருந்து சென்ற பரோடா மகாராஜா போபால் பீகம், இந்தூர், குவாலியர், பிகானீர், பாடியாலா, கபர்த்தாலா, இடார் முதலிய மன்னர்களும் சென்றிருந்தனர். இன்னும் பூபாகத்தின் பலதேசங்களிலிருந்தும் பல பிரபுக்கள் கோடிக் கணக்காக வந்து முன்னடியே குழுமியிருந்தார். என்று சொல் லப்படும்போது லண்டன்மாநகரம் எப்படி யிருந்திருக்குமென் பதை யோசித்துப் பாருங்கள்? பல உலகமும் ஒன்று சேர்ந்த ஓர் புதிய உலகம் போலல்லவா யிருந்திருக்கும். கவர்ன்மெண் டாரே பட்டணத்தை வெகு விநோதமாகச் சிங்காரித்திருந்தன ராம். இதுவன்றி ஜனங்களும் வெகு விநோதமாகத் தத்தம் வீடுகளைச் சிங்காரித்திருந்தனராம். அநேக மரியாதை குண்டுகள் போடப்பட்டன. தெருக்களிலெல்லாம் அநேக ஆடல்களும் பாடல்களும் நடந்தேறின. இரவெல்லாம் திரளான ஜனங்கள் அங்கங்கே கூடிக்கொண்டு அநேக விதமான அடையாளங்களால் இராஜபக்தியைக் காட்டினார்கள். இராணுவ வீரர்கள் தங்கள் கூடாரங்களிலிருந்து புறப்பட்டு அணிவகுத்துச் சென்றார்கள். அங்கங்கே அவசியமான இடத்தில் குதிரைக்காரர்கள் காவல் புரிந்து வந்தார்கள். வேடிக்கைபார்க்க வரும் ஜனங்களுக்குத்தாக சாந்தி செய்துகொள்ள நல்லவசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந் தன. அநேக ஸ்திரீஜனங்களும் பலபாகங்களிலிருந்து வந்துகூடி யிருந்தனர்.

வெஸ்ட்மினிஸ்டர் ஆபி என்னுமிடத்தில் சக்ரவர்த்திக்கு மகுடாபிஷேகம் நடந்தமையால் அதுவும் அதை. யாட்டினப்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 FEB 1911
MADRAS.

சக்ரவர்த்தினி.

"கேடில் விழுச்செல்வங் கல்வி ஒருவருக்கு
மாடல்ல மற்றை யவை."

VOL. VI. } MADRAS, JANUARY 1911. { NO. 6,
தொகுதி சு. } சென்னை, ஜனவரிமீ 1911. { பகுதி சு,

மானம்.

மானம் என்னும் இம்மொழி நம்நாட்டுச் சிறுவர் சிறுமியர் யாவரும்அறிந்ததாகும். இச்சொல் சர்வ சாதாரணமாகவழங்கிவரும் சொல்லேயாயினும் இது அகங்காரம், அபிமானம், அளவு, உவமை, கணிதம், குற்றம், நேசம், பெருந்தன்மை, மரியாதை, பெருமை, வலி, விமானம், வெட்கம் எனப் பலவிதமாகப் பொருள்படத்தக் கது. இவைகளில் சாதாரணமாக நமது சம்பாஷணையில் வழங் கும் மானம் என்னும் மொழிக்குப் பெருந்தன்மை, பெருமை மரியாதை என்பன பொருளாகும். இவ்வார்த்தை யாவர்க்கும் தெரிந்ததேயாயினும் இதைப்பற்றிப் பரிசீலனை செய்யவேண்டியது மிகவும் அவசியமாகும். ஏனெனில், மானம் மனிதரிடச் [...]
காணப்படும் ஓர் உயர்வான குணம். குணங்கள் எல்லா[...]
ளும் மிகவும் சிறப்புடையது. மனிதவர்க்கத்தாரை [...]
போலிருந்து பாதுகாப்பது இவ்வுத்தம குணமாகும். [...]
ஸ்திரீ புருஷர்களை நல்லவுடைவுடுத்துப் பரிசுத்த[...]
செய்வது. திரவியத்தைத் தேடிப் புகழ்பெறச்செய்வ[...]
மாதர்களுடைய கற்புக்குக் காவலாகவிருப்பதும் இ[...]
கல்வி, நல்லோர் பெரியோர்களுடைய சினேகம் இ[...]
தல், கொலை, களவு, பழி, பாவம் இவைகளுக்கு அஞ்சி[...]
யவைகளுக்கு இந்த மானமே காரணம். மானமெ[...]
யான குணம், நம்மைவிட்டு விலகுமாயின், பொய், [...]

பொருமை முதலிய பல தீயகுணங்களாகிய பேய்கள் நமதுடலை அவைகளுக்கு நர்த்தனசாலையாகக் கொண்டு கூத்தாடத்தொடங்கி விடும். அப்பொழுது உலகத்தில் நேரிடும் தீங்குகளை அளவிடமுடியாமற் போகும்.

"மயிர் நீப்பின் வாழாக்கவரிமா வன்ன
ருயிர் நீப்பர் மானம் வரின்"

என்றார் திருவள்ளுவர். அதாவது—ஒரு கவரிமானனது தன் தேகத்திலுள்ள மயிரில் ஓர் மயிரை இழக்கநேரிடின் உயிரைத் துறந்துவிடும். அதுபோல் உயிரை விட்டால் மானந்தங்கும் என் விடத்து அந்த உயிரைத் தாங்காமல் இறந்துபோவார் மானமு டையவர் என்று சொல்லப்படுகிறது. ஆகவே மானத்தினு உயிர் பெரிதல்லவென்றாயிற்று.

"மானம் போவதிலும் பிராணன் போவது நல்லது" என்றும் "மானத்திலும் பிராணன் பெரிதா" என்றும் உலகில் பழமொழிகள் வழங்கி வருவது மறிக. தவிர, "மானமழிந்தபின் வாழாமைமுன் னினிதே" என்றதும் காண்க. மானத்தை யிழக்கத் துணிந்தவ ஈனமதிக்குள்ளாவான். ஈனமதிபெருகில் அவன் மிருகத்தினு கேடாவான். மிருகத்தினும் கேடுகெட்டு ஒருவன் உலகத்தில் ஜீவிப்பதிலும் இறந்தொழில் மேலல்லவா? இதனாற்றான்,

டார்பின் சென்றொருவன் வாழ்தலி னந்நிலையே
னெனப்படுதனன்று.'

திருவள்ளுவநாயனார் கூறியதுமெனவறிக. அதா பிகழ்வார் பின்சென்று பொருள் பெற்று அதனாலோ ாழ்தலின் அதைச் செய்யாமல் இறந்தானென்று அவனுக்கு நன்று என்றார். உலகத்தில் யாசிக் னுக்குநேரிடின் அவன்மானத்தை யிழந்தேயாசிக்க ரம் என்னும் குணம் அவனிடமிருக்குமாயின்

அந்தயாசகத்துக்குச் செல்லவொட்டாமல் அவனைத்தடுக்கும். தடுக்கப்படுவானாயின், உயிர்விடுதலையே அதனினும் மேலெனநினைப்பான். மானமிழந்து துணிந்தானாயின் அவனைப்பற்றிப் பேச்சில்லை. யாசிப்பதே மானக்கேடு. அதிலும் தன்னை யிகழ்வார்பின் சென்று யாசித்து வயிறு வளர்ப்பதெனின் மானம் உடைய ஒரு மனிதன் மனந் துணியுமா ? துணியாது. இது பற்றியே,

"என்பா யுகினு மியல்பிலார் பின்சென்று
தம்பா டுரைப்பரோ தம்முடையார்-தம்பா
டுரையாமை முன்னுணரு மொண்மை யுடையார்க்
குரையாரோ தாமுற்ற நோய்."

என்று நாலடியார் போதிப்பது மறிந்து கொள்க. அதாவது தம்மைத் தமக்குரியராகவுடையவர் (மானமுடையவர்) தமதில்லாமையின் வருத்தத்தைச் சொல்லாமையின் முன்னரே அதனையறிந்து நீக்கவல்ல கூர்ந்த அறிவுடையார்க்கும் தாம் இல்லாமையால் அறிந்த வருத்தத்தைச் சொல்லும் இயல்புடையவராகார். அங்ஙனமாகத் தம்முடம்பு தசையின்றி எலும்புடையதாய் இளைத்துப் போயினும் ஒருவர் கருத்தைக் குறிப்பாலுணரும் இயல்பில்லாதவர்க்குப் பின்போய்த் தமதில்லாமையின் வருத்தத்தைக்கூறி யிரப்பரோ ? இரவார் என்பதாம்.

ஒருவன் தன்மானத்தைக்காத்துக் கொள்ளவேண்டுமாயின் அவனிடம் நற்குணம், நன்னடத்தை, நன்மை தீமை, பகுக்கும் அறிவு, அவ்வறிவைப் பெருக்கும் கல்வி, நல்லோர் பெரியோருறவு, பொய்யாமை முதலாகிய பல அருமையான குணங்களிருக்க வேண்டும். மானம் என்பதைக் காப்பதன் முன்னிட்டு இவ்வளவனந் தம் நற்குணங்களும் இன்றியமையாதன வாகின்றன. நற்குணங்களமையப்பெற்ற ஒருவன் உலகத்தில் எல்லாராலும் மதிக்கப்படுவான் என்பதிலும் ஈசுவரானுக்கிரகத்திற்கருகனுவா னென்பதிலும் ஐயமுண்டோ? இவைகளுக்குக்காரணம் மானமேயல்லவா? இதனுற்றான்,

"சீரினுஞ் சீரல்ல செய்யாரே சீரோடு
பேராண்மை வேண்டுபவர்"

என்றார் நமது ஞானசிரியர் திருவள்ளுவர். அதாவது—புகழுடனே மானத்தை நிலைநிறுத்த வேண்டுபவர் புகழ்செய்யுமிடத்துந் தமது குடிமைக்கொவ்வாத இழிவான செய்கைகளைச் செய்யார் என்பதாம். தவிர,

"பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டு முயர்வு.

என்றார். அதாவது—குடிப்பிறந்தார்க்கு நிறைந்தசெல்வம் வந்தவிடத்து எல்லாரிடத்தும் பணிவும், குறைந்த நல்குரவு வந்தவிடத்துப் பணியாமையும் வேண்டும் என்பதாம். ஆகவே மானமுடையவர் தாந்தாழ்தற்கேதுவானவற்றைச் செய்யார் என்பது துணிவு.

கடைசியாக நாம் கூறுவதுயாதெனில், மானத்தின்மகிமை அளவுகடந்தது. அதைக்கைவிடலாகாது. அதனைநமக்கோர் அரணாகக்கொள்ளவேண்டும். அதுவே நமக்கு இகபரசுகங்களைக் கொடுக்கும். மானத்தைக்காப்பதே மனிதஜன்மமெடுத்தவர்க்கழகு. மானத்திற்கஞ்சி எவ்வளவோபேர்உயிர்விடுதல் பிரத்தியக்ஷம். மானம்இவ்வளவு சிறப்புடைத்தெனின் வேறுநாம் அதன்விஷயமாகக்கூறுவது யாதுளது. இதன்காரணமாக நமது நாயனார்போதிப்பதைக் கவனியுங்கள்.

"இளிவரின் வாழாதமான முடையா
ரொளிதொழு தேத்துமுலகு"

அதாவது-தமக்கோர் இழிவுவந்தவழிபொறுத்து உயிர்வாழாமல், அதனைநீத்த மானமுடைய ஒருவனுடைய புகழ் இந்த உலகத்தோரால் தொழுதேத்தப்படும் என்றார். இது உண்மையேயாம்

பாருங்கள்! ஒரு பொய்சொல்ல அஞ்சி அரிச்சந்திரன் பாடு பட்டதை எவ்வுலகுமன்றோ புகழ்கின்றது! இவைகளன்றி மானம் என்னும் இந்தவியாசத்தை யொட்டி குமரேசசதகம் என்னும் அருமையான நூலிற்பெறப்படும் ஓர் செய்யுளையும் இங்குக்காட்டுவாம்.

கனபார மேறிற் பிளந்திடு வதன்றியே
கற்றூண் வளைந்திடாது
கருதலர் காலுடைந் தாலுமுயி ரளவிலே
கனசூர னமரின் முறியான்

தினமோ ரிடுக்கண் வந் துற்றாலும் வேங்கை தோல்
சீவனளவிற்கொடாது
வனமேறு கவரிமா வுயிர்போகு மளவுந்தன்
மயிரி னொன்றுங் கொடாது

திறமான பெரியோர் சரீரங்கள் போயினும்
செப்புமுரை தவறிடார்கள்
வாராத வாபத்து வருகினுங் கற்புடைய
மாதுநிறை தவறி நடவாள்

மனதார வுனதடைக் கலமென்ற கீரற்கு
வன்சிறை தவிர்த்த முருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே?

ரசாயனசாஸ்திரமும் அதைக்கற்றவர்களும்.

இது இயற்கைநூற்களில் ஒன்றாகும். இவ்வுலகில் நம்மைச் சுற்றிலும் இருந்து நம் ஐம்புலன்களின் மூலமாய் நமக்கு வேறு வேறு உணற்சியை உண்டாக்கும் பதார்த்தம் அல்லது பொருள்

அல்லது வஸ்து என்று சொல்லப்படுகிறவைகளை யெல்லாம் பற்றிக் கூறுவது இந்தசாஸ்திரம். இப்பொருள்களைப் பலகூறுகளாக வகுத்தும் அப்பலகூறுகளைப்பின்னும் முக்கியபொருளாய் ஒன்றுசேர்த்துக்கூட்டியும் சோதனைசெய்து அவைகளின் அமைப்பைத்தெரிந்துகொள்வது இச்சாஸ்திரத்தின் முதல் நோக்கமாகும். இன்னும் இவைகளின் குணவிசேஷங்களைத் தெரிவதும் இவைகளின் அமைப்புக்கும் குணவிசேஷங்களுக்குமுள்ள சம்பந்தங்களை அறிவதும், பின் இவைகளை என்ன என்ன விதமாய் ஏராளமாக வியாபார முறைமைக்குக் கொண்டுவரமுடியுமென்பதைக் கண்டுபிடித்து வெளிப்படுத்துவதும், பின்னரும் இப்படிக்கிடைக்கும் வஸ்துக்களை என்ன விதமாய் நம் சுகத்துக்கும், சௌகரியத்துக்கும் உபயோகப்படுத்தலாமென்று விசாரிப்பதும், இந்நூலின் மற்றைய நோக்கங்களாகும். இத்தகைய நோக்கங்களை விளக்கிச்சொல்வதே இரசாயனசாஸ்திரமெனப்படும். சுருங்கச்சொல்ல, இரசாயனசாஸ்திரம் பதார்த்தங்களின், அமைப்பினுடையவும் குணங்களினுடையவும் மாறுபாடுகளைக் குறித்துக் கூறுவதாம்.

இந்த ரசாயன சாஸ்திரம் தற்காலத்தில் பல பகுதிகளாகப் பகுக்கப்பட்டுவருகிறது. அநேகமாய் எல்லாவிதக் கைத்தொழில்களிலும் தன் பிரயோஜனத்தைக் காட்டுகிறது. வேஷ்டிகளுக்குச்சாயம் ஏத்தவேண்டியதென்ன, பச்சைத்தோல்களைப் பதனிடவேண்டியதென்ன, பாகிலிருந்து நல்ல பூராசெய்ய வேண்டியதென்ன, மற்றக் கண்ணாடி, கடிதம், சவுக்காரம், மெழுகுவத்தி, மெருகெண்ணெய், வாஸனைதித்தைலம் இவைகள் எல்லாம் நல்லசரக்குகளாய்ப் பொதுஜனங்களுக்கு உபயோகமாய் வெளிவரவேண்டியதென்ன, எல்லாம் நல்ல ரசாயனசாஸ்திரியின் புத்திகூர்மையிலும் அனுபவ ஞானத்திலும் தொழில்செய்யும் திறமையிலும் பொருத்து இருக்கின்றன. மற்றும் விவசாயசாஸ்திரத்திற்குக் கணக்கற்ற உதவி ரசாயனசாஸ்திரிகள் புரிகின்றனர். இவையல்லாமலும் வியாதிக்குத்தகுந்த மருந்துகளை பிறகலப்பில்லாமல் வெகுசுத்தமாய் செய்து கொடுப்பதும் ரசாயனசாஸ்திரி கடனே. இன்னும் ஜீவவர்க்கசாஸ்திரம் என்ன,

தாதுவர்க்கசாஸ்திரம் என்ன, ஔஷதசாஸ்திரமென்ன இவைகளுக்கும் தக்கதுணையாய் நின்று ரசாயனசாஸ்திரிகள் ஒத்தாசை பண்ணுகிறார்கள்.

இவ்விதமாக ரசாயனசாஸ்திரம்கற்று கற்றதை கறிக்காகும்படி அனுபவத்துக்குக்கொண்டுவரவேண்டியதுஎவ்வளவு அவசியம்என்பதை ஒருவாறு அறியலாம். இதுமேற்குநாடுகளில் மிகப்பிரபலமாகக் கற்கப்பட்டு வழங்கிவருகிறது. முக்கியமாக ஜெர்மெனிதேசத்தாரைத்தோற்கடிக்க இவ்வுலகில் வேறொருஜாதியாரும் கிடையாது. அவர்களுக்கு அவர்கள் ராஜாங்க உதவி வெகுவிசேஷமாக உண்டு. பீட் என்னும் கிழங்கினின்று சர்க்கரை பண்ணி எல்லாநாடுகளிலும்ஏற்றுமதிசெய்துமற்றச்சர்க்கரைகளைவியாபாரத்துறைகளினின்றும் ஓடச்செய்தது ஓர் ஜர்மன் ரசாயனசாஸ்திரியின்நுண்ணறிவேயன்றிவேறில்லை. இன்னும் நம் நாட்டு அவுரி கொழுஞ்சி முதலியவைகளை எதிர்பாராது அவைகளுக்கு ஈடாய் ரசாயனச்சேர்வையின் மூலமாய் மனுஷகிருத்தியமான ஓர்பொருளை வெளிப்படுத்தினதும் ஓர் ஜர்மென் புத்திதீக்ஷண்யமே. ஆனால் இவைகளுக்கெல்லாம் பல்லாண்டுகள் பிடித்தன. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் ஆயுள் நாளை ஒவ்வொரு படிப்பு அல்லது சித்திக்கே சமர்ப்பிக்கிறார்கள்.

இன்னும் வரும்.

K. C. V. B.A.

சிலந்தியும் ஈயும்

அல்லது

வஞ்சரை நம்பி வந்த கேடு.

ஒருகாலத்தில் ஒரு சிலந்தி ஈயொன்றைப் பார்த்து, "நண்ப! என் அறைக்கு நீ யிசைந்து வருவையோ? அம்மாதிரி அறையை

நீ எங்கும் என்றும் கண்டிராய். அதனுள்ளே செல்லவேண்டிய சுழற்படிக்கட்டு வெகு விசித்திரமாயிருக்கும். நீ கண்டு களிக்க வேண்டியகாட்சிப்பொருளெத்தனையோ அங்குண்டு. அவற்றையெல்லாம் உனக்குக் காட்டுவேன். தயவுசெய்" என்றது. அதற்கு ஈ உன் சுழற்படி வழிச்சென்றவர் எவரும் மீண்டு கீழே வர முடியாதே! என்னை யங்கு வரும்படி வீணே வேண்டாதே. நான் வர மாட்டேன்" எனச் சொல்லிற்று.

"நீ தொலைதூரம் பறந்தலைந்து திரிந்து அலுத்துப்போயிருப்பதாய் எனக்கு நிச்சயமாய்த் தோன்றுகிறது. மேலான மெத்தையும் மெதுவான விரிப்பும் சுற்றிலும் அழகிய திரையுங் கொண்ட என் படுக்கையைப் பார்த்தால் நீயே ஆசை கொள்வாய். அலுப்புத்தீர அதில் படுத்துறங்கு வா" என்று சிலந்தி யழைக்க ஈ "உன் படுக்கையில் படுத்துத் தூங்கினவர் சதாகாலநித்திரையாய்த் துஞ்சுவாரன்றித் திரும்ப ஒருபோதும் எழுந்திரார் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். என்று பதிற் சொல்லிற்று.

சூது குடிகொண்ட அச்சிலம்பி இவ்வளவுக்குள் அவ்வீயின் பேதைமைக் குணத்தைத் தெரிந்துகொண்டு அதைப்பார்த்து "அன்பு மிகுந்த நண்பனே! உன்மேலெனக்குள்ள பிரீதியை நானெப்படிக் காட்டுவது. அறுசுவையுண்டியில் எதெது உனக்குப் பிடிக்குமோ அதுவெல்லாம் நிறைந்த என்பாகசாலையோ போஜனசாலையோ நீ வந்து ப்ர்த்து வேண்டியதை உண்டு களித்தாலன்றி எனக்குத் திருப்தி ஏற்படாது. ஒரு முறையேனும் என்னில்லத்திலுண்ணத் தயவுசெய்வாய்" என்று வேண்டலும் ஈ "உணவுச்சாலையிலுள்ளன வெல்லாம் பற்றிக் கேட்டிருக்கிறேன். பார்க்கவேண்டேன். அது முடியாது. நான்வரேன்." என்று சொல்லுகையில் அதன் சுருதி வரவா இறங்கி வருவதை யறிந்து கொண்டது அச்சிலந்தி.

இயற்கையாகவே விடாமுயற்சியுள்ள தீயர்க்கு "இன்பம் பயக்கும் ஓரிலக்கும்" கண்டவிடத்து ஊக்கம் உயருமன்றோ ? அவ்வஞ்சச் சிலந்தி ஈயை நோக்கி " பிராணநேசனே ! நீ பேச்சில் வெகு சதுரன். உன் மிருதுவும் இலேசுமான சிறகுகளின் அழகு தான் என்ன அழகு! கபடமற்ற கருணையலே யெறிந்தொழுகும் உன் கண்ணொளிதான் என்ன ஒளி! ஓர் சிறந்த நிலைக்கண்ணாடி என் அறையில் வைத்திருக்கிறேன். அதில் உன்னழகை ஒரு முறையேனுங் கண்டு பின் செல்லலே" என்று வெகு உருக்கமாய் முகஸ்துதி செய்தது. அதற்கு அந்த ஈ சற்று மனமிளகி "அன்பு நிறைந்ததோழ! உன்கர்ணாமிருதமான சொற்களுக்காக நன்றி பாராட்டுகிறேன். வந்தனம். இன்றுபோய் நாளை வருகிறேன்" என்று பதிற் சொல்லிற்று.

அழகுச் செருக்குற்ற அசட்டு ஈ மறுதினம் தவறாது வருமென்றே அப்பொல்லாச் சிலந்தி தன்னுறையுட் சென்று அங்கோர் மூலையில் நூல் வலை பின்னி அதனுள் ஈயை யுண்பதற்கான உண்கலமொன்றமைத்து வைத்து விட்டு வாயிலில் வந்து வரவை எதிர் பார்த்திருந்தது. ஈவரக்காணலும்,

"முத்தும் வெள்ளியும் மொய்த்தநின் சிறகுடன்
இங்குவா ! இங்குவா ! எழிலா ரீயே !
பச்சையூ தாநிறம் பதித்ததுன் போர்வை.
உச்சியின் மேலுனக் குள்ளதோர் கொண்டை.
ஒளிரும் மணிபோ லுனக்குள விழிகள்.
என்னுடை விழிகளோ ஈயமே போல
மங்கலா யுள"வென மகிழ்ச்சியாய்ப் பாடிற்று.

ஐயோ ! அவ்வறிவிலாச் சிற்றீ நயவஞ்சமான அச்சிலம்பியின் வார்த்தையைமெய்யென நம்பித்தன் கண்களின் பலஅழகியவர்ணங்களையும், முடியின் சிறப்பையும் சிறகுகளின் அழகையும் பற்றி எண்ணி யெண்ணி அவற்றைக்காணலாமென்னும் மனோபாவம்

முற்றி, உங்கார ஒலி செய்யும் சிறகொடு உயரப் பறந்து வந்து சிலந்தியின் வலையண்டை நெருங்கிற்று.

குரூரக் கூற்றின் விரூபமிச்சிலந்தி
பல்குழி நிறைந்த பசையறு தன்முகத்
தல்குடி யிருக்க வருளிலாக் குண்டுகண்
தீயெழத் திரித்துப் பேழ்வாய் திறந்து
கருக்கொளுஞ் சினையீ வெருக்கொளக் கௌவி
விரித்தெண் டிசையிலு நிறுத்திய கரங்களின்
முன்னிரு கையில் வெந்நுறக் கிடத்தி
மார்பொடு வயிறுஞ் சோர்வுறக் கடித்துப்
பறித்திழுத் திசித்துக் கறிக்கமற் றவ்வீ
நொந்துநொந் தந்தோ சிந்தனை மயங்கி"யது.
பின்னொரு போதுங் கீழிறங்கி வரவே யில்லையே!

தந்நயமன்றிப் பின்னென்றுமறியாக் கன்னெஞ்சராகிய நய வஞ்சர் பயனில் மொழிகளை நம்பினோர் நாசமேயடைவர்என்பதைச் சிறுவரும் சிறுமியரும் உணர்ந்து உலகியலறிவிற்றேர்ந்து உய்வாராக.

P. R. சுப்பய்யர்.

ரங்கநாயகி.

(144-ம் பக்கத் தொடர்ச்சி)

ரங்கநாயகி அதிவிரைவாய் ராஜகிரகம் சென்று அங்கு பிரபு கால்களில் விழுந்து, "கண்யமும் கீர்த்தியும் பெற்ற பிரபுவே! விசனமுற்ற நான் ஓர் விண்ணப்பம் செய்துகொள்ள இங்கு வந்தேன்" என்றாள். அங்குதன் "நல்லது, உன்வேண்டுகோளென்ன,?" என்று வினவினன்.

அப்பொழுது ரங்கநாயகிதன் அன்புள்ள அண்ணனின் உயிரை நயமாய்க் கெஞ்சிக்கேட்டாள். ஆனால் அங்குதன், "கன்னிகையே! இனி யொன்றும் செய்ய முடியாது. அவனுக்குத் தண்டனை குறித்தாய்விட்டது. அவனைத் தூக்கிலிடத்தான் வேண்டும்." என்றான். "நியாயமான நீதிதான். ஆனால் வெகு கொடூரமான தண்டனை! ஆகையால் நான் இனி 'எனக்கும் ஓர் உடன்பிறந்தோன் இருந்தான்' என்று எண்ணிக்கொள்ளவேண்டியது தான். பகவான் தங்களுக்குக் கருணை புரிவாராக," என்று சொல்லித்திரும்பினாள்.

ஆனால் அவளைத் தொடர்ந்து சென்ற விதூஷகன், "அம்மா மறுபடியும் போ. எளிதில் இக்காரியம் நடக்காது. அவர் கால்களில் விழுந்து கெஞ்சிக்கேள்? அப்படி சாதாரணமாய்க்கேட்டால் பயனில்லை," என்றான்.

அவள் அப்படியே மறுபடியும் சென்று பிரதிநிதியின் கால்களில் விழுந்து தன்னண்ணனுக்கு உயிர்ப் பிச்சையிடும்படி மன்றாடியபொழுது, "தண்டனை விதித்தாய் விட்டபடியினால் இனிமாற்ற முடியாது" என்று கல்நெஞ்சமுடைய அங்குதன் சொன்னான்.

"ஒன்றும் செய்யமுடியாதா! ஏன்முடியாது? முடி தரித்தவர்களெல்லாம் அரசர்களா? அல்லது காவிவஸ்திரம் பூண்டவர்களெல்லாம் சன்னியாசிகளா? உடைவாளேந்தியவர்களெல்லாம் வீரர்களா?சிவப்புப்பாகை தரித்தவர்களெல்லாம் போலீஸ்உத்தியோகஸ்தர்களா? யோசித்துப்பாரும்? யாராகவிருந்தாலும் இரக்கமற்றிருந்தால் உன்னதபதவி யடையமாட்டார்களென்பது திண்ணம்" என்றாள் ரங்கநாயகி.

"நீ உடனே இவ்விடத்தை விட்டுப்போ," என்று அங்குதன் கட்டளையிட்டான்.

ஆனால் ரங்கநாயகி கெஞ்சிக் கேட்பதை விடாமல், "நீர் என் அண்ணனைப் போல் பிழைசெய்து, அப்பொழுது என் தமையன் உம்மைப் போல் ராஜப்பிரதிநிதியாயிருந்தால், இவ்வளவு கொடூரமாயிருப்பானென்று கனவிலும் நினைக்கவேண்டாம்; அல்லது நான் இராஜப்பிரதிநிதியாயிருந்து நீர் என்னைப் போல் கெஞ்சிக் கேட்டால், நானிவ்வளவு கொரேமாயிருப்பேனா ? இல்லை. அப்பொழுது நியாயாதிபதியாயிருப்பதெப்படி என்பதையும், குற்றவாளியாய்ச் சிறையில் அடைப்பட்டிருப்பதென்ன வென்றும் நீர் தெளிவாயறிவீர்" என்று ரங்கநாயகி உரைத்தாள்.

"என்னை ஏன் பழிக்கிறாய் ? யோசித்துப்பார்? நானா உன் அண்ணனைத் தூக்கிலிடும்படி உத்திரவளித்தேன் ? இராஜாங்க நியாயச்சட்டத்தாலல்லவா அவன் தூக்கிலிடப்படுகிறான்? அவன் என் உறவினனாயிருந்தபோதிலும், சகோதரனாயிருந்தபோதிலும், அல்லது பிள்ளையாகவிருந்தபோதிலுங்கூட உன் அண்ணனைப் போலவே அவனையும் தண்டிப்பேன். அவன் நாளைக்கு சாகத்தான் வேண்டும்" என்று அங்குதன் பிரதியுத்தரமளித்தான்.

"நாளைக்கா ! இவ்வளவு சீக்கிரமாகவா ! ! சற்று தாமதிக்கலாகாதா ? மாமிசந்தின்போர்கள் ஆடுமாடுகளைக்கூட தகுந்த காலத்தில் வெட்டுகிறார்கள். மனிதனைத் தூக்கிலிடுவதற்குக் காலப்பொருத்தம் வேண்டாமா ?—கண்யமும், உத்தமகுணமும் பொருந்திய பிரபுவே, சற்று யோசித்துப் பாரும்? என் தமையன் செய்த குற்றத்தை அனேகர் இதுவரை செய்திருந்தபோதிலும் எவரும் தூக்கிலிடப்படவில்லை. ஆகையால் இத்தண்டனையை முதலில் விதிப்போன் நீர்; முதலில் இதற்கு ஆளாகிறவன் என் தமையன்;—பிரபுவே, சற்று யோசித்துப் பாரும், என் அண்ணன் செய்தது பிழையா என்று உம்மனதையே கேளும் ? பிழையாக உமக்குத் தோன்றினால் சரி; உம்மிஷ்டப்படி நடக்கலாம்" என்றாள் ரங்கநாயகி.

ரங்கநாயகி முதலில் சொல்லியதை யெல்லாம்விடக் கடைசியில் சொன்ன வார்த்தைகள் அங்குதன் உள்ளத்தை யசையச் செய்தன,

ரங்கநாயகியின்பேரில் ஓர்விதமான குற்றமுள்ள இச்சையை அவன் மனதில் உண்டாக்கியது. குணசீலனும் இக்குற்றத்திற்காகத்தான் தன்னுல் தண்டிக்கப்பட்டிருக்கிருனென்பதையும், உற்றறிந்தான். இதனுல் அங்குதன் மனக்கலக்கமடைந்து அவள் முன்னிலையினின்று அப்புறமேகத்திரும்பினுன்.

இதை யறிந்த ரங்கநாயகி, "துரைமகனே! சற்றுத் திரும்பிப் பாரும். நான் எப்படிப்பட்டலஞ்சம் கொடுப்பேன்; யோசியும், திரும்பிப்பாரும்" என்ருள்.

அவள் தனக்கு லஞ்சம் கோடுப்பதாகச் சொல்லியதைப் பற்றி ஆச்சரியப்பட்டு, எனக்கா, லஞ்சங்கொடுக்கப்போகிருய்?. என்று அங்குதன் பதிலுரைத்தான்.

"ஆம், நான்கொடுப்பது பொன்னல்ல, தங்கமல்ல, வைரமல்ல, வைடூரியமல்ல, நீர்மேலுலகில் சுகம்பெறுவதற்காக, ரங்கநாதனை வேண்டிக்கொள்வேன். பதிவிரதைகளைப் பட்டினியாய்ப் பிரார்த்திக்கச்செய்வேன், என்றுரங்கநாயகி மறுமொழி கூறினுள். "சரி நாளைக்குப்பார்ப்போம், என்று அங்குதன் சொல்லி யதன்பேரில், அவள் கடைசியாக "அங்குதனை இணங்கச்செய்வேன், என்று நம்பிக்கை கொண்டாள்,

அவள்சென்றதும் அங்குதன் சற்றுயோசனை செய்து, "இதென்ன? இதென்ன ?அவளை மறுபடியும் காணவேண்டுமென்றும் அவளுடன் சம்பாஷிக்க வேண்டுமென்றும் தோன்றி மறுபடியும் வரச்சொன்னது யாதுகாரணம்பற்றி? நான் அவளிடம் காதல் கொண்டிருக்கிறேனு? அல்லதுகனவா காண்கிறேன்? துராசாரமுள்ள எவளும் இதுவரையில் என்மனதைக் கவர்ந்ததில்லை. ஆனுல் நீதி நெறியறிந்த இந்தப் பதிவிரதை என் மனதுமுழுவதையும் கவர்ந்து விட்டாள், இதுவரையில் மனிதன் காதல் கொள்வதைப்பற்றி, நான் புன்னகையுடன் ஆச்சரியப்பட்டேன்," என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

அன்றிரவு முழுவதும், இக்குற்றமுள்ள எண்ணங்களின் பொருட்டு, தன்னால் உயிரை யிழக்கும்படி தண்டிக்கப்பட்ட குற்றவாளியைவிட அதிகமனக்கலக்கத்துடன் அவஸ்தைப்பட்டான்.

சிறையில் குணசீலனை சன்னியாசி வேடம் பூண்ட அரசன் சந்தித்து மோக்ஷமடைவதற்கும், மனவமைதி யடைவதற்கு முண்டான வழிகளைப்போதித்தான். அதனால் அங்குதானே தன்கற்பற்ற குணத்தினால் விளைவிக்கப்பட்ட குற்றத்தால் அதி விசனத்திற்கும் வியாகூலத்திற்கும் ஆளானான். ஒருசமயம் ரங்கனுபகியை வசப்படுத்திக்கொள்வதை விரும்பினான். மற்றொருசமயத்தில், தீதென்று தெரிந்திருந்தும் செய்யவிரும்புவதைப்பற்றி மனநோயுடன் வருந்தினான்.

கடைசியாக அங்குதனைத்தீய எண்ணங்கள்தான் மேற்கொண்டன. சற்றுமுன் தனக்கு லஞ்சம் கொடுப்பதாகச் சொன்னதைக் கேட்டு ஆச்சரியப்பட்ட இவன் இப்பொழுது அச்சிறுமியை வசப்படுத்த, அவளால் மறுக்கக்கூடாத லஞ்சம் கொடுப்பதாகத் தீர்மானித்தான்.

(இன்னும்வரும்.)

T. M. இராஜகோபாலாசாரி.

ஞானோபதேசம்.

---

1. பசு கெட்டதானாலும் பால் கொடுக்கிறது. பாலானாலும் பாம்பிடம் விஷமாகிறது. இவ்விதம் பாத்திரம் அபாத்திரமறிந்து இவைகளை விசாரிப்பதில், நல்ல பாத்திரத்தில் தானம் செய்வது வழக்கம். பாத்திரத்தின் புண்ணியத்திற்குத் தக்கபடி தானம் செய்த பலனும் அதிகமாகும். ஞானமதிகமானாலும் புண்ணியம் அதிகமானாலும் நல்ல பாத்திரமா வென்பதை கவனிக்கவேண்டும்.

2. அன்னத்தைத்தானம் செய்யப் பசியுள்ளவன் பாத்திரமாவான். நீரைத்தானம் செய்யத் தாகமுள்ளவன் பாத்திரமாவான். திரவியத்தைத் தானஞ்செய்ய விசேஷமாகப் பாத்திரத்தைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

3. ஞானத்துடன் செய்யும் காரியத்திற்கு ஞானமில்லாதவன் செய்யும் காரியத்தைக் காட்டிலும் மிகுதியான பலன் உண்டாகும். ஞானம் ஏற்படுவதற்குத் தக்கபடி பாபமும் பரிகாரமாகும். ஞானமுள்ளவன் பாபகாரியத்தைச்செய்வானுகில், ஞானமில்லாதவன் செய்த பாபத்திலும் கொடிதாகும். எவ்வளவுக் கெவ்வளவு ஞானம் அதிகமாகிறதோ அவ்வளவுக் கவ்வளவு பாபம் குறைகின்றது. பிரகாசமுள்ள அக்கினி விறகுகளை எவ்விதம் சாம்பலாக செய்கிறதோ அவ்விதம் ஞானமாகிற அக்கினி சகல கருமங்களையும் சாம்பலாகச் செய்கிறது. தங்கத்திற்கு அக்கினியின் சம்மந்தத்தால் வர்ணம் அதிகப்படுவதுபோல், ஞானியின் சேர்க்கையால் புண்ணியம் அதிகமாகிறது.

4, புண்ணியஞ்செய்வதால் புண்ணியம் விருத்தியாகிப் பாபஞ்செய்வதால் பாபம் விருத்தியாகிப் புண்ணியம் குறைவாகிறது. இந்த விசாரணை மிகவும் சூக்ஷமமானது. ஸ்தூலமாகப் பார்க்கிறவர்களுக்குப் பிரயாசத்தாலும் தெரிந்து கொள்ளக்கூடாதது. அவ்விதமாயினும் தத்துவ ஞானத்தை அனுசரித்து, இவ்விதம் விசாரிக்கவேண்டும்.

5. இறுமாப்படைந்து காரியா காரியமின்னதென்றுணராமலும் ஒழுங்குதப்பி நடப்பவர்களுமானவர்கள் குருவாக விருப்பினும் அவர்களைக் கண்டித்துச் சீர்திருத்தல் வேண்டும்.

6. தருமத்தைக் காப்பாற்ற வேண்டும். "தருமம் தலை காக்கும்" என்பதற்கிணங்க அது நம்மைக் காப்பாற்றும். தருமமென்பது மனம் வாக்கு காயங்களால் செய்யப்படுவது. கடவுள் வாழ்த்து முதலியன மனதினல் செய்யத்தக்க கருமம்.

பொய்யாமை முதலியன வாக்கையனுசரித்ததாகும். கோயில் வலம் வருதல் திருப்பணி செய்தல் முதலியன காயத்தை யனுசரித்ததாகும்.

ஹிதோபதேசம்.

1. ஒருத்தி தன் தந்தையிடமிருந்து பெறுகின்ற சுகமும் மிதமே. தாயினிடத்திலிருந்து பெறுகின்ற சுகமும் மிதமே. மக்களிடத்திலிருந்து பெறும் சுகமும் மிதமே. ஆனல் பதியினிடத்திலிருந்து பெறும்சுகம் அமிதமானது. ஆகவே பதிக்கு எவள் தான் வழிபாடு செய்யாதிருப்பாள்.

2. லோகவிவகாரம், பயம், வெட்கம், தாக்ஷண்யம், தர்மம் பாபம் இவ்வைந்து மில்லாதவர்கள் ஸ்திரீகளாயினும் சரி, ஆடவர்களாயினும் சரி, அவர்கள் மனிதவகுப்பிற் சேர்ந்தவர்களன்று. அவர்களோடு சகவாசம் செய்வதுங் கூடாது.

3. புசிக்கத்தகாத வஸ்துக்களை விலக்கவேண்டியது அவசியம். அதனல் இருதயம் சுத்தமாகும், மனதிற்கும் விசுத்தியுண்டாகும்.

4. இல்லை யென்னது யாசகருக்கீதல், எல்லாரிடத்தும் இன்சொல் வழங்கல், நன்மை தீமையறிந்து நடத்தல், தைரியத்தைக் கைவிடாமை இந்த நான்கும் ஒருவனுக்கு அவனுடன் பிறந்தகுணங்களாகவிருக்குவேண்டுமே யல்லாது கற்றுக்கொள்பவைகளல்ல.

5. பணமிழந்த முதலாளி தன் குமாஸ்தாவைத் துவேஷிப்பான். ஆயுளை யிழந்தவன் வைத்தியனைத் துவேஷிப்பான். பணம், ஆயுள் இவ்விரண்டையு மிழந்தவன் பிராம்மணர்களைத் துவேஷிப்பான்.

6. உண்மையைப் பேசுவதில் எப்பொழுதும் கோழைபடலாகாது.

7. ஒருபொழுதும் ஒருவருடைய உடைகளைப் பார்த்து அவரை நல்லவரென்று நம்பக்கூடாது.

8. ஒருவன் எப்போதும் அவன் செய்கையில் சுறுசுறுப்பாயிருக்கவேண்டும். நினைப்பதில் மிதமாயிருக்கவேண்டும், பொறுப்பதில் சுதந்தரமுடையவனாக விருக்கவேண்டும்.

9. விரோதியினிடம் எப்பொழுதும் ஜாக்கிரதையாகவேயிருக்கவேண்டும். நமது விரோதி நம்மை எதிர்க்கச் சமயம்பார்த்திருப்பானென்பதை மறவாதிருக்கவேண்டும்.

10. நமக்கு இதைப்பற்றி ஒன்றுந் தெரியாது என்பதை ஒருவன் அறிவானாகில், அவன் உடனே அதைக்கற்றுக்கொள்ள விரும்புவான்.

முக்கிய விஷயங்கள்.

1. எட்வர்ட் மகாராஜா ஆளுகைக்குட் பட்டவர்களில்,

208,000,000	இந்துக்கள்.
94,000,000	மகமதியர்கள்.
58,000,000	கிறிஸ்துவர்கள்.
12,000,000	புத்தர்கள்.
23,000,000	மற்றவகுப்பினர்கள்.

2. டெலிபோனானது தரைமார்க்கமாகச் செல்லுமாகில் ஒரு செகண்டுக்கு 16,000 மயில் வீதம் செல்லும். கடல் மார்க்கமாய் ஒரு செகண்டுக்கு 6,020 மயில் வீதந்தான் செல்லும்.

3. உலகத்தில் 13,400 விதமான தபால் ஸ்டாம்புகள் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன.

4. மானிஷியர்டியாக் என்பவர் தம்முடைய வானக்கப்பலில் 7000 அடி தரை மட்டத்திற்கு மேலே புறப்பட்டுப்போனாராம்.

5. இலவம் பருத்திக்கொட்டையில் 100-க்கு நாற்பத்தைந்து பாகம் பொட்டும் 25-பாகம் தைலமுமிருக்கின்றன.

6. நெல்லில் 60 விதங்களிருக்கின்றன.

லலிதாம்பிகை.

சிறுவர்க்கான நூதனகதைகள்.

இலேககன் ஒருவன் கிஞ்சித்தேனும் குற்றமற்ற ஒருவனுடைய படத்தை எழுதவிருப்பங் கொண்டிருந்தான். அவன் ஒரு சமயத்தில் ஓராற்றினருகில் அழகான பாலகனொருவன் விளையாடிக்கொண்டிருப்பதைக் கண்டு தான் எழுதக்கருதிய சித்திரத்திற்குரிய உருவமமைந்தவன் இவனே யெனக்கொண்டான். அச்சிறுவன் முழந்தாட்படியிட்டுக்கொண்டு கைகளைக் கூப்பிக்கொண்டுக் கடவுளைத் தொழுகிறுப்போல் அவ்விலேககன் சித்திரமொன்றை எழுதி முடித்தான். அச்சித்திரம் யாவராலும் புகழப்பட்டது. இதற்குப் பிறகு அநேக வருடங்கள் கழிந்தன. இலேககனும் வயதில் முதிர்ந்தவனாயினன். அப்பொழுது அப்படத்திற்கு ஜதையாக குற்றமுள்ள ஒருவனுடைய படத்தை எழுத விருப்பங்கொண்டான் அவ்விலேககன். ஆகவே அக்குணம் பொருந்திய ஒருவனை அவன் தேட ஆரம்பித்தான். அவன் அருகாமையிலுள்ள ஒரு சிறைச்சாலைக்குப்போய் யாவராலும் நிந்திக்கப்பட்டு விலக்கப்பட்ட ஒருவனைப்பார்த்தான். அவன் தன்னுடைய மனதைக் கெட்ட வழியில் செலுத்தி அழிந்தவன். அவனுடைய முகமே அவனுடைய துர்க்குணத்தை வெளியிட்டது. இலேககன் அவனுடைய சரித்திரத்தை விசாரித்தான். ஆ! என்ன விந்தை! அவன் தான் இலேக

கன் குற்றமற்ற படமொன்றை எழுதியபோது முழந்தாட்படியிட்டுக்கொண்டுக் கடவுளைத் தொழுத சிறுவன். அவன் வயதிற்பெரியவனாக ஆக ஆக துர்க்குணங்கள் அவனுடைய இருதயத்தையும் மனதையும் கொள்ளைகொண்டதுடன் அவனுடைய வெளித்தோற்றத்தையும் முற்றும் மாற்றிவிட்டன.

ஒருகாலத்தில் கனவானொருவன், புத்திசாதுரியத்தையும் தன் எஜமானனின் அந்தஸ்திற்கேற்றதோரணையையும் உடையஒருவேலைக்காரனுடன் ஒரு விருந்திற்குப்போனான். அக்கனவான் புசித்துக்கொண்டிருக்கும்பொழுது சோற்றுப் பருக்கைகள் சில அவனுடைய தாடியில் ஒட்டிக்கொண்டன. அப்போது வேலைக்காரன் தன் எஜமானனுக்கு இதைக்குறிப்பால் தெரிவிக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் பின் வரும் சாதுரிய மொழிகளை மொழிந்தனன். ''ஐயா ! இரவிற் பாடும் குருவியானது ரோஜாச் செடியின்மேல் படிந்திருக்கிறது". கனவான், வேலைக்காரனுடைய பொருளை யூகித்து தன் தாடியை துடைத்துவிட்டான். இவ்வளவு விவேகமுள்ள வேலைக்காரனை அடைந்திருக்கக் கொடுத்துவைத்த அக்கனவானை விருந்தினோர்கள் வாழ்த்தினார்கள்.

மற்றொரு கனவான் இக்கனவானுடைய அதிர்ஷ்டத்தின் பொருட்டு பொறாமை கொண்டவனாகி மறுநாள் தன் ஸ்நான அறையில் முன்னிரவு நடந்த சங்கதிகளை நினைத்துக்கொண்டான். உடனே அவன் தன் வேலைக்காரனைக் கூப்பிட்டு முன்னிரவு நடந்த விருத்தாந்தங்களை அவனுக்குக்கூறி ஏதேனும் ஒரு சமயம் தான் விருந்துண்ண நேரும்பொழுது, தன் தாடியில் சோற்றுப்பருக்கைகள் ஒட்டிக்கொள்வதைப் பார்த்தால் அதே மாதிரி ஞாபகப்படுத்தும்படி சொன்னான். வேலைக்காரனும் அப்படியே ஐயா என்றான். சில நாட்களுக்குப்பின்னர் இக்கனவான் ஒரு விருந்துக்கழைக்கப்பட்டான். புசித்துக்கொண்டிருக்கும்பொழுது கனவான்தாடியில் சில சோற்றுப் பருக்கைகள் ஒட்டிக்கொண்டன. உடனே வேலைக்காரன் எஜமானனைப் பார்த்து ''ஐயா ! ஐயா ! நேற்று நீங்

கள் ஸ்நான அறையில் சொன்னபடி உங்களது தாடியில் சோற்றுப்பருக்கைகள் ஒட்டிக்கொண்டிருக்கிறதை ஞாபகப் படுத்துகிறேன்,'' என்று மிக உற்சாகத்துடன் சொன்னான். உடனே யாவரும் கொல்லென்று சிரித்தார்கள். கனவான் வெட்கத்துடன் வீடு போய்ச் சேர்ந்தான். வேலைக்காரனும் தள்ளப்பட்டான்.

ஆகவே பொறுமை நமக்கு இழிவையே உண்டாக்கும்.

வைத்தியனொருவன் தினந்தோறும் இஞ்சிப்பணிகாரம் செய்து ஒரு பானையில் வைப்பது வழக்கம். ஆனால் அப்பணிகாரம் தான் தின்பதைவிட வெகு சீக்கிரமாக கண்ணுக்குக் காணாதபடி தினந்தோறும் மறைந்துபோனதைக் கண்டான். அவன் எவ்வளவு ஜாக்கிரதையாயிருந்தும் பயன்படவில்லை. இவ்விரகசியத்தைக் கண்டுபிடிக்க எவ்வளவு பிரயத்தனப்பட்டும், திருடனைக் கண்டு பிடிக்க யாதொரு சூட்சுமமும் அகப்படவில்லை. அவனுடைய வேலைக்காரர்களோ ஒன்றும் தெரியாதென்று சாதித்தார்கள். ஆகவே திருடனைக்கண்டுபிடிக்க வைத்தியன் ஓர் யுக்தி செய்தான். ஒரு நாள் பணிகாரத்துடன் வாந்தி மருந்தை அவன் கலந்துவிட்டான். மறுநாள் அவன் தாதியானவள் வாந்தி பண்ணினாள். வைத்தியன் அவளைப் பயப்படுத்தி உண்மையையுரைக்கும்படி கேட்க, தாதி தன் குற்றத்தை ஒப்புக்கொண்டாள். ஆகவே அறிவேசக்தி.

ஒரு சமயத்தில் பிச்சைக்காரனொருவன் குருடனைப்போல் பாசாங்குசெய்துகொண்டு மேற்கூறிய வைத்தியனிடத்தில் பிச்சை கேட்டான். வைத்தியன் உலக விவகாரங்களில் தேர்ச்சியுடையவனாதலால் இவனுடைய சூதை அறிந்து கத்தரிக்கோலொன்றால் இத்திருட்டுப்பயலின்கண்களை உரிப்பதாகச்சொல்லி அவனை அணுகினான். அவனோ வைத்தியனுடைய எண்ணத்தை அறிந்துகொண்டு ஓட்டம் பிடித்தான். வைத்தியன் அவனைப்பின் தொடர்ந்து "பொறு உன்னுடைய கண்களை சொஸ்தப்படுத்துகிறேன்'' என்றான். அது முதல் இப்பிச்சைக்காரன் வைத்தியனைப் பிச்சைகேட்கிறதேயில்லை.

சங்கரன்.

இந்துக்களின் விவாகம்.

நமது விவாக சம்பந்தமாக நெடுநாளாய் நம்மவர்களுள் ஒரு பெரிய குறை கூறப்பட்டு வருகின்றது. அதாவது, அதிபாலியத்திலேயே விவாகம் செய்யப்படுவதைத் தடுக்கவேண்டுமென்பதாம். இது நமது சமூக அபிவிருத்தியின் நோக்கமாகக் கவனிக்கவேண்டிய விஷயங்களுள் முக்கியமானதேயாம். இதன் சம்பந்தமாகப் பன்முறை பலவிடங்களில் நம்மவர்கள் ஒன்று சேர்ந்து மீட்டிங்கு கூடிப்பேசியிருக்கிறார்கள். தீர்மானங்களும் செய்திருக்கிறார்கள். வருஷத்திற்கொருமுறை கூடும் காங்கிரஸ் மகாசபையிலும் பேசப்பட்டு வருகின்றது. இவ்வளவிருந்தும் இவ்விஷயம் பேச்சளவிலேயே நிற்கிறதே தவிர, அனுஷ்டானத்தில் காணப்படவில்லையென்பதை நாம் துணிந்து கூறுவோம். ஆனால் பால விவாகம் தீமைக்கிடமானது என்பதைமட்டும் சிலர் அறிந்திருக்கிறார்களெனத்தெரிகிறது. இது நாளடைவில் முற்றுப் பெறவேண்டும். திடீரென்று கை கூடுவது கஷ்டம். பலர் துணிந்து செய்கையால் காட்டவேண்டும்.

இதுநிற்க, இச்சென்னையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் "ஹிந்து அஸோஸியேஷன்" சபையில் நமது விவாகத்தைப்பற்றி இம்மாதம் 10-ம் தேதி ஒரு அமெரிக்க மாது பேசியதே நமக்கு இம்மாதம் இதைப்பற்றி எழுத இடந்தந்தது. அந்த அமெரிக்க மாது காரோலையன் வாலஸ் என்னும் பெயர் கொண்டவர். அம்மாது இங்குவந்து நமது விவாகத்தைப்பற்றிப்பேச நேர்ந்ததின் காரணம் விளங்கவில்லை. பாலியவிவாகத்தால் தேசத்துக்குப் பல கஷ்டங்கள் நேரிடுகின்றனவென்று இரக்கங்கொண்டுபேச முன்வந்திருக்கவேண்டுமென்று நிச்சயிக்கப்படுகிறது.

ஏனெனில், சென்ற பத்து வருஷகாலமாக இந்தியாவில் அவர் இருந்து வருவதாகவும், கல்கத்தாவில் ஸ்தாபிக்கப் பட்டிருக்

கும் "ஹிந்து விவாகத்திருத்த சங்கம்," விஷயமாய் முயன்று வருவதாகவும் தெரிகிறது.

அம்மாது சென்ற 10-ந் தேதி பேசியபோது அச்சபைக்கு நமது சென்னையின் முக்கிய பிரமுகர்களாகிய ஆனரபில் திவான் பகதூர் L. A. கோவிந்தராகவய்யர், ஆனரபில் மிஸ்டர் டி. வி. சேஷகிரி அய்யர், ஜஸ்டிஸ் P. R. சுந்தரமையர், மிஸ்டர் S. சோம சுந்தரம் பிள்ளை இவர்கள் போன்ற பலர் விஜயஞ்செய்திருந்ததாகத் தெரிகிறது. அவ்வம்மையின் கருத்து யாதெனில், "ஹிந்துப்பிள்ளைகளுக்கு 25-வயதிற்குப் பிறகும் பெண்களுக்கு 16-வயதிற்குப் பிறகும் விவாகம் செய்தல் நலமென்றும் இப்படிச் செய்யாவிடில் இந்துசமூகத்திற்குநாளடைவில் பலகஷ்டங்கள் நேரிட்டுச்சமூகமே நசித்துப் போமென்றும் இது விஷயமாய் ஹிந்துக்களுள் நேரிடும் கஷ்டங்களைத்தாமறிந்திருப்பதாகவும், இதற்கு மதவிஷயமான கஷ்டங்கள் இருக்கிறதெனில் அது இந்துக்கள் கட்டுப்பாடாய் முயற்சி செய்யின் இது நீங்கிவிடும்" என்றும் பேசினார்.

இவ்வம்மையின் பிரசங்கம், வந்திருந்த இந்து கனவான்கள் யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு, அப்பொழுதே இது சம்பந்தமான கமிட்டியொன்று ஏற்பட்டுக்கொண்டிருப்பதாகவும் பிரஸ் தாபிக்கப்பட்டது.

மிஸ்ஸெஸ் காரொலைன் வாலஸ் பேசினதும், அதை நமது கனவான்கள் அங்கீகரித்து ஒரு கமிட்டி ஸ்தாபிக்க ஏற்பட்டிருப்பதையும்நோக்கத் திருப்திகரமாகவே யிருக்கிறது.

இந்த மீட்டிங்கின் விஷயமாய் சுதேசமித்திரன் பத்திராசிரியர் மிஸ்டர் ஜி. சுப்பிரமணிய ஐயரவர்கள் தமது பத்திரிகையின் தலையங்கத்தில் ஒரு முக்கியமான விஷயம் தெரிவித்திருக்கிறார். அது நமது அபிப்பிராயத்திற்கு முற்றும் பொருந்தியதாகவே யிருப்பது பற்றிச் சந்தோஷப்படுகிறோம். அவர் "இவ்விஷயமாய் வெகு நாளாக நம்மவர்கள் பேசிவருகிறார்கள். பேசிவந்தும் சொன்னபடி

செய்வாரைமட்டும் காணேம்'' என்ற கருத்துப்பட எழுதியதுமன்றி அவ்விதம் பேசிய ஆசாரத்திருத்தக்காரர்களில் ஒருவர் தமது மகளுக்குச் சமீபத்தில் விவாகம் செய்யவேண்டி வந்தபோது அவளை எட்டுவயதில் விவாகம் செய்து கொடுத்தாரென்று பத்திரிகைகளிற் சொல்லப்படுகிறதென்றும் இவ்விதமே பம்பாயிலும் பெயர்போன ஒரு ஆசாரத்திருத்தக்காரர் தாம் வெகு நாளாய்ச் சொல்லி வந்த அபிப்பிராயப்படி செய்யக்கூடிய சமயம் நேரிட்டபோது தன் மகளுக்குச் சிறுவயதிலேயே விவாகம் செய்ததாகவும் சொல்லப்படுகிறது. இப்படி அநேக திருஷ்டாந்தங்கள் சொல்லலாம். வெளியில் ஐரோப்பியர்களுக்கு இஷ்டமாய் ஆசாரத்திருத்தக்காரரென்று பேர்வரும்படியாகப்பேசிவிடுகிறார்கள். வீட்டில் வந்தால் ஸ்திரீகளுடைய பேச்சுக்கு இரண்டு சொல்லமுடியாமல் தாங்கள் வெளியில் கண்டித்த அனுஷ்டானத்துக்கு உட்பட்டு விடுகிறார்கள். ஜாதிக்கட்டுப்பாடும் இதற்குக்காரணமாகச் சொல்லவேண்டும்'' என்றார்.

நமது ஐயரவர்களின் சிரேஷ்டமான இவ்வபிப்பிராயம் நம்மவர் எல்லாராலும் கவனிக்கத்தக்கது. ஒரு விஷயம் பேசக்கூடாது. பேசினால் அவ்விதமுடிக்கவேண்டும். அப்படிமுடிப்பதில்லை. இது நம்மவரிடம் காணும் பெருங்குறை. இதை முதலில் நீக்கிக்கொள்ள வேண்டிய அவசியத்தை யாவரும் அறியவேண்டும். அப்பொழுது தான் எண்ணங்கள் நிறைவேறும்,

அமெரிக்கமாது பேசியபடி நமது ஆடவர்களுக்கு வயது 25 ஆக வேண்டுமென்பதும் பெண்களுக்குப்பதினாறாகவேண்டுமென்பதும் தற்காலம் மனிதர்களுடைய ஆயுள் பரிமாணத்தை நோக்கக்குறைக்கவேண்டுமெனத்தோன்றுகிறது. ஆடவர்களுக்கு 20-வயதிலும் பெண்களுக்குப் பன்னிரெண்டு 14-க்குள்ளுமிருக்கின் போதுமானதாகும். தற்காலம் நாகரீகத்தில் நிகரற்றதென விளங்கும் ஜப்பானில் 16-ம் 12-மாக வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. எங்கு எப்படியிருப்பினும் சீதோஷ்ணஸ்திதிக்குத்தக்கபடி மனிதருடைய

பக்குவம் மாறுபடுமென்பது உண்மையாதலால், நம்மிந்தியாவில் அமெரிக்கமாது கூறியபடி 25-ம் 16-மாக உயர்த்துவது பொருத் தமுடையதல்லவென்பதே எமது அபிப்பிராயம்.

எவ்விதத்திலும் பாலிய விவாகம் கூடாதென்பதை நாம் ஒப்பு க்கொண்டு அதை நிவர்த்திக்க வழிதேடுவதே நன்மை தருமென்ப தையும் இப்பத்திரிகை மூலமாகத்தெரிவிக்கலானேம்.

A, S. பாரதி.

தேயிலை.

தேயிலையானது முதன்முதலில் சீனதேசத்திலிருந்துதான் வந்தது. அவ்விடத்திலிருந்து உலகத்தின் பல பாகங்களுக் குங் கொண்டுபோகப்பட்டது. இப்பொழுது இந்தியாவிலும் ஜப்பான் முதலிய நாடுகளிலும் ஏராளமாகப் பயிராக்கப்படுகிறது. அப்படி இருந்தாலும் சீனதேசமே இதை அதிகமாகப் பயிரிட்டு வெளித்தேசங்களுக்கு ஏற்றுமதி செய்கிறது.

தேயிலை மலைப்பாகங்களில் ஓங்கிவளரும். அத்துடன் அதற்கு ஏராளமான மழையும், பெய்தமழை நிலத்தை விட்டுச்சுவரிப்போய் விடக்கூடியதாயு மிருக்கவேண்டும். அப்படிக்கில்லாவிட்டால், தே யிலை பயிராகாது. ஆதலாற்றான் தேயிலை மலைகளில் வளர்கின்றன. தேயிலைச் செடியானது சுமார் 30அல்லது 40 அடி உயரம் வளரும். ஆனால் தோட்டக்காரர்கள் அதை வளரவொட்டாமல் செடியானது சிறியதாகவிருக்கும்பொழுதே நுனிகளைக் கிள்ளிவிடுவார்கள். ஆதலால் அது 4 அல்லது 5 அடி உயரத்திற்குமேல்வளருவதில்லை. இந்த விதமாக நுனிகளைக் கத்தரிப்பது சீனதேசத்திலும், மற்று முள்ள பிரதேசங்களிலும் கையாடிவரப்படுகிறது. சீனதேசத்தில் சீனர்கள் தங்கள்தோட்டங்களிலேயே தேயிலை பயிரிடுகிறார்கள்.

இலைகளைத் தாங்களே பறிப்பார்கள். அறுவடைக்காலங்களில் மலைச் சாரல்களில் சீனர்கள் தங்கள்குடும்பத்தாருடன் போய் இலைகளைக் கிள்ளுவதும், கொழுந்து பறிப்பதும் பார்ப்பதற்கு வெகு ரமணீயமாகத்தோன்றும். சிறிய குழந்தைகள்முதல் பெரியவர்கள் வரையிலும் ஆணும் பெண்ணும் ஒவ்வொரு இலையாகக் கிள்ளினாலும் நிரம்பவும் சுறுசுறுப்பாக வேலை செய்வார்கள். இந்தவிதமாக ஒவ்வொருநாளும் சேகரித்துவைக்கும் தேயிலைக்கொழுந்து, இலை முதலியவைகளை, தேயிலைபதனிடும் இடத்திற்குக் கொண்டுபோவார்கள். அவ்விடங்களில் தேயிலை பதனிடப்பட்டு முதல் தரம் இரண்டாந் தரம் என்று பொருக்கப்பட்டபின் டப்பிகளில் அடைக்கப்படுவது வழக்கம்.

தேயிலையை வருஷத்திற்கு 4 முறை கிள்ளுவார்கள். முதல் தடவை ஏப்பிரல் மாதத்தில் கிள்ளுவார்கள். அப்பொழுது தளிர்களையும், மொட்டுகளையும் பறிப்பார்கள். இரண்டாவது தடவை மே மாதத்திலும், மூன்றாவது ஜூன் மாதத்திலும், நான்காவது ஆகஸ்டு மாதக் கடைசியிலும் கிள்ளுவார்கள். முதல் தடவை பறிக்கும் இலைகள் தான் விலையிலும், மணத்திலும், குணத்திலும், உபர்ந்த தாயிருக்கும். பின் ஒவ்வொரு தடவையிலும் தேயிலையின் மணம் குறைந்து கொண்டே வரும்.

தேயிலையில் அநேக விதம் உண்டு. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பெயரிடப்பட்டிருக்கின்றது. ஆனால் எல்லாவிதமான தேயிலைகளையும்பச்சை நிறமான தேயிலை, கறுப்பு நிறமானதேயிலை என்று இரண்டுவிதங்களாகப் பிரிக்கலாம். இரண்டு விதமான தேயிலைகளும் ஒருவிதச்செடிகளின் இலைகளினின்றே எடுக்கபடுகின்றன. ஆனால் இவைகளுக்கு வித்தியாசம் யாதெனில், அவைகளைப்பதம் செய்வதினால் ஏற்படும் வித்தியாசமேதவிர வேறில்லை. இலைகளைச் சீக்கிரத்தில் உலர்த்தினால்பச்சை நிறமான தேயிலை அகப்படும். அப்படிக்கில்லாமல் தேயிலையைத்தாமதமாய் உலரவிட்டால் கறுப்புநிறமானதேயிலை உண்டாகும்.

சீனர்கள் நாம் தேயிலைக்கிஷாயத்தைப் பால், சர்க்கரையுடன் உட்கொள்வதுபோல் உட்கொள்ளாமல் கஷாயத்தை மாத்திரம் எடுத்துக் கொள்வார்கள். பணக்காரரான சீனர்கள் ஓர் பீங்கான் கிண்ணத்தில் தேயிலைத்தூள்களைப் போட்டு அதன்மேல் உஷ்ணமான ஜலத்தை ஊற்றி, கஷாயமானவுடன் வடிகட்டிச் சாப்பிடுவார்கள். ஏழைகளானவர்கள்தாம் நமது தேசத்தில் நாம் உபயோகப்படுத்துகிறதுபோல் பாத்திரங்களை உபயோகித்துக்கஷாயத்தை யிறக்கிச் சாப்பிடுவார்கள். ஆனால் நாம் உபயோகிப்பது போல் பால், சர்க்கரை முதலியவைகளை உபயோகிப்பது வழக்கமில்லை. ஜப்பானிலோ, தேயிலைத்தூள்களை நன்றாய் வடிகட்டி உஷ்ணஜலத்திற்போட்டு கிஷாயமானவுடன்தூளையும் சேர்ந்து பானம்பண்ணிவிடுவார்கள். ருஷியர்கள் (Russians) தேயிலையையே அதிகமாகக் கையாண்டு வருகிறார்கள். இவர்களுக்குத் தேயிலை சீனதேசத்திலிருந்தும், இந்தியாவிலிருந்தும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இவர்கள் தேயிலைக் கிஷாயத்துடன் பால், சர்க்கரைக்குப் பதிலாக எலுமிச்சம்பழ ரசத்தை உபயோகிக்கிறார்களாம்.

தேயிலை சாப்பிடுவதினால் உடம்புக்குச் சுகமே ஒழிய கெடுதியில்லை. ஆனால் அதிகமாக உபயோகித்தால் கெடுதி செய்யுமென்று சாஸ்திரமறிந்தவர்கள் சொல்லுகிறார்கள்.

S. V. Iyer.

வர்த்தமானங்கள்.

பிராணிகளின் ஜீவகால நிர்ணயம்.

ஈ ஒரு வருடம், வெட்டுக்கிளி ஒன்பது மாதம், சொசுகு இரண்டு மூன்று மாதம், (ராணி) தேனீ இரண்டொரு வருடம், (பெண்) எறும்பு (லார்ட் ஏவ்ஸ்பரியின் பார்வையில்) 15 வருடம் (ஜீவித்திருந்தது). மச்சங்கள் பெரும்பாலும் நீண்ட ஆயுளுடையன. அசரை (ஓர் வகைமீன்) தொட்டி ஜலத்தில் 60 வருடம் (இருந்தது). பைக் (ஓர் வகைமீன்) கயல் (கெண்டை) மீன் 150 வருடம், ஒரு பெரிய

யைக் சுவாமீன் ஏரியில் 267 வருடமிருந்தது; சால்மன் (ஒருவகை மச்சம்) நான்கு வருடமிருந்து முட்டை யிட்டுச்சாகின்றது. ஜப்பானிலிருக்கும் சாலமாண்டர் என்னும் பிரம்மாண்டமான மீன் 52 ஒருடமிருந்தது. ஆமை 250 வருடம், முதலை நூறுண்டு. பட்சிகள்:-ஊர்க்குருவி 25 வருடம், கனேரிகூண்டில் 20 வருடம், ராபின் 25 வருடம், கொண்டலாட்டிகள் 60 வருடத்திற்குமேல், பார்பரியிலிருக்கும் ஒருபுறு 25 வருடமிருந்தது. வேறொன்று முப்பது வயதுடனும் மற்றொன்று 40 வயதுடனு மின்னுமிருக்கின்றன. கிளி 80 வருடம், அண்டங்காக்கை 69 வருடம், நாரை 60 வருடம், கழுகு நூறுண்டு, அன்னப்பட்சி 70 வருடம், இராஜாளி 180 வருடம், மீன்குத்தி 65 வருடம், மிருகங்கள்:—நாய் 15 அல்லது 20 வருடம், பூனை 20 வருடம், முயல் 12 வருடம், அணிற்பிள்ளை 8 வருடம், மூஞ்சும் 6 வருடம், சிங்கம் 35 வருடம், கரடி 40 வருடம்.

லோ—ரி.

ஆச்சரியமான சம்பவம்.

சேலத்திற்கும் தர்மபுரிக்கும் மத்தியில் ஓர்கணவாய் இருக்கிறது. அக்கணவாய் தாண்டினதும் மலை அடர்ந்து ஜனசஞ்சாரமில்லாத ஓரிடத்திலுள்ள ஒரு குன்றின்பேரில் பெரிய கற்பாறையொன்று நெடுநாளாய் இருந்தது. சென்ற 2 மாசத்திற்கு முன் ஒருநாளிரவு பெருத்த சப்தம் திடீரென்று, மேற்படி பாகத்து 5 மைல் தூரமுள்ளகிராமத்து ஜனங்களுக்கெல்லாம் கேட்டது. வழக்கப்படி மாடு மேய்க்கப்போன பிள்ளைகள் அகஸ்மாத்தாய்ப் பாறைக்கல் உடைந்து கீழேவந்திருப்பதைக்கண்டுஓடி இரண்டுமைல் தூரமுள்ள ஒரு கிராமத்தில் தெரிவிக்க, ஊரார் பாறை உடைந்து போயிருப்பதைக் கண்டார்கள். குன்றின்மேலிருந்த பெரியபாறையானது, யாவரும் ஏறமுடியாத விடம். சிறு உளியால் தகர்த்து இரண்டாக அப்போதுதான் வெட்டினதுபோல் உடைந்து 3 பாகமாகக் குன்றின்மேலிருந்தது கீழேவந்திருப்பதும் அதில் இரண்டு

கற்கள் வந்த அடையாளமும் விவரமாகத் தெரிந்தன. ஒரு பெரிய குண்டாங்கல்லிற் கூரானபாகம் தரைமட்டத்திற்கு 10—20 அடி தூரத்தில் பாதையின்பேரில் இறங்கி மறுநாள் அதேகல் வேறு இடத்தில் திரும்பி முனை மேல்நோக்கி இருந்தது. மற்றொருகல் கீழிறங்கி அடிவாரத்திருக்கும் ஒரு காட்டாற்றைக் கடந்து வயலில் பயிருக்குச் சேதாரமில்லாமல் சிறிது தூரம் வந்து 10–20 அடி உயரமுள்ள ஒரு மேட்டின் பேரில் கிடந்தது.

அங்கு வந்திருந்த சிலர்மேல் ஆவேசம் வந்து ஒன்று விஷ்ணுவென்றும், மற்றொன்று சிவனென்றும் குன்றின்மேலிருக்கும் மற்றொரு பெரியபாறை 2-மாதத்தில் பூசைசெய்யும் தட்டு, மணி இவைகளுடன் இறங்கி வருவதாகவும், மறுபடியும் உத்தரவாகும் பரியந்தம் கோயில் கட்ட யாவரும் பிரயத்தனப்படக் கூடாதென்றும் சொல்லிற்று. இந்த இரண்டுமாதகாலமாய்த் தான் இரண்டு பூசாரிகள் ஏற்பட்டுப் பூஜை செய்கிறார்கள்.

விஷ்ணு என்று சொல்லும் கற்பாறையின்பேரில் சங்கு சக்கர அடையாளங்கள் அனேகம் இருக்கின்றன. உண்டிகள் வைக்கப் பட்டு நாளது தேதிவரை 200 ரூபாய் சேர்ந்திருக்கிறது. அனேகர் தங்கள் கோரிக்கைகள் நிறைவேறியதாகச் சமாராதனை செய்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு முந்தி அங்குள்ள மேற்படி காட்டாற்றில் நீர் அருந்தின மாத்திரத்தில் 6-மாத சுரம் வருவது வழக்கம். இப்போது தினந்தோறும் 500 பேருக்குக்குறையாமல் அதில் ஸ்நாநம் செய்கிறார்கள்; யாதொரு வியாதியும் வருகிறதில்லை. தலைநோய் பரந்துபோகிறது.

சர்க்கார் அதிகாரிகள் வந்து பார்த்துச் சில ஏற்பாடுகள் செய்கிறார்கள். மற்றும் எவ்விதமானவியாதியும் போய்விடுகிறதென்று அவ்விடமிருந்து வந்தவர்களால் தெரியவருகிறது. திருவண்ணாமலை ஈரோடு முதலிய விடங்களிலிருந்து ஜனங்கள் கும்பல் கும்பலாய் வந்துகொண் டிருக்கிறார்கள். இரண்டொரு கடைகளும் அங்கு ஏற்

பட்டுவிட்டன. இதன் வைபவம் எவ்வாறாகுமோவென்பதைப் பற்றிப் பலர் பற்பல விதமாகப் பேசிக்கொள்ளுகிறார்கள். மித்திரன்.

இஃதொரு வியப்பை யுண்டாக்கக்கூடிய விஷயமாயிருத்தல் பற்றிச் சுதேசமித்திரனிலிருந்து ஈண்டெடுத்துக் காட்டலாயிற்று.

மழை பெய்யும் மரம்:— தென் அமெரிக்காவில் மிகு உஷ்ணமாயுள்ள பாகங்களில் மழை பெய்யும் மரங்களிருக்கின்றன. இந்த மரங்கள் 60 அடி உயரம் வளரும். அம்மரங்களின் இலைகளுக்குக் காற்றிலிருக்கிற ஈரத்தைக் கிரகித்து நீராக்கும் சக்தியுண்டு. நீண்ட கிளைகளிலுள்ள இலைகளெல்லாம் இவ்வாறு ஈரத்தைக் கிரகிப்பதால் எப்போதும் நீர்த்துளிகளைச் சிந்திக்கொண்டே யிருக்கும். ஆனால் அந்த மரங்களைச் சுற்றியுள்ள பூமியல்லாம் சேறாய்ப்போக, அங்கே புல்பூண்டுகள் செழிப்பாய் வளரும். வெறுங்கொல்லையாள்யிருக்குமிடங்களில் இந்த மரங்கள் இருப்பதால் அவை செழிப்பாகவிருக்கும்.

அமெரிக்கா பள்ளிக்கூடங்களில் ஸ்திரீகளே பிரதானம்.

அமெரிக்கன் ஐக்கிய நாடு (United States) பள்ளிக்கூடங்களில் உத்தியோகமாயிருக்கும் உபாத்தியாயர்களுள் ஸதிரீகளே அதிகமாய்க்காணப்படுகிறார்கள். 1880-ம் வருஷத்தில் 43 உபாத்தியாயர்களும் 57 உபாத்தியாயினிகளும் இருந்தார்கள். 1890ம் வருஷத்தில் உபாத்தியாயருள்34 ஆண்பாலரும் 66 பெண்பாலரும். 1908ம் வருஷத்தில் 21 ஆண்பாலரும் 79 பெண்பாலருமாயிருந்தார்கள். இதற்கு முக்கிய காரணம், ஆண்பாலருக்கு வேறு நல்ல சம்பளம் தரக்கூடிய உத்தியோகங்கள் கிடைக்கின்றனவென்று சொல்லப்படுகிறது.

ரெயில்வே எஞ்சின்கள் மோதிக் கோள்ளாமலிருக்க ஓர் உபாயம்.-

பாடியாலா சமஸ்தானத்தில் வேலையாயிருக்கும் லாலா ராஜா பாபு என்பவர், எதிர்ரோய்வரும் இரண்டு ரெயில்வேக்கள் ஒன்றுக்

கொன்று மோதிக்கொள்ளாமலிருக்க ஓர் உபாயம் புதிதாய்க் கண்டுபிடித்திருக்கிறார். அச்சமஸ்தானத்து அரசருக்கு மகாராஜாவின் முழு அதிகாரமும் சமீபத்தில் கொடுக்கப்பட்ட அவ்விசேஷதினத்தில், ராஜாபாபு இரண்டு மாதிரி இஞ்சின்கள் செய்து இரண்டு பக்கங்களிலிருந்து எதிராய் ஓட்டி குறித்த இடத்தில் அவைகள் தானாகவே திடீரென்று நின்றுபோவதைக் காண்பித்தார். மேலும், அவர் சிம்லா ரெயில்வே கான்பரன்ஸினும் இவ்வுபாயத்தைச் செய்து காட்டினார்.

"14 வரு கவர்ன்மெண்டு வேலைசெய்தான்."

ஒரு பழய ஆசாமி ஈயக்குழாய்களைத் திருடியதற்காகவும் இதர பழய குற்றங்களுக்காகவும் 14 வருஷம் கடுங்காவல் விதிக்கப்பட்டான். 1898-ம் வருஷத்தில் அவன் தண்டனை முடிந்தவுடன் விடுவிக்கப்பட்டதும் அவன் ஒரு கடைவைத்து வியாபாரஞ் செய்ய ஆரம்பித்தபோது கடைக்கு முன்பாக "14 வருஷம் கவர்ன்மெண்டுவேலை" தான்செய்ததாக எழுதி ஒருபோர்டு போட்டுக்கொண்டானாம்!

டில்லி தர்பார்.—அடுத்த வருஷம் நடக்கப்போகிற டில்லிதர்பாருக்கு இப்போது முதற்கொண்டே அங்குள்ள பங்களாக்களுக்கு ஏராளமான வாடகை கொடுத்து தீர்மானிக்கப்படுகிறதாம்.

190-ஆம் வருஷ சென்ஸஸ் கணக்குப்படி, இந்தியாவில் வைதவ்யமடைந்த பெண்களின் தொகை 25,891,936. இதில் 19,738,468, இந்துக்கள்.

5-வயதுக்குட்பட்டவர்கள்.			19,487
10	,,	,,	95,798
15	,,	,,	275,862
20	,,	,,	522,867
25	,,	,,	938,725
30	,,	,,	1,432,608
35	,,	,,	2,267,361
40	,,	,,	2,068,491
45	,,	,,	3,770,495
50	,,	,,	2,264,038
	மொத்தம்.		13,655,732

இருப்புப்பாதை வண்டியில் பிரயாணம் போகிறவர்களுக்கு குறிப்புகவ்.

அடியிற்கண்ட நிருபம் "மகாராணி" என்னும் பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கிறது.

இக்காலத்தில் ஏறக்குறைய யாவரும் இருப்புப்பாதைவண்டியிலேறிப்போக்குவரவுசெய்பவர்களா யிருந்தாலும் இருப்புப்பாதைச் சங்கத்தாருக்கும் இருப்புப்பாதை வண்டியில் பிரயாணம் செய்பவர்களுக்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றி தெரிந்துகொண்டிருப்பவர்கள் அருமையா யிருப்பதால் அது விஷயம் யாவருக்கும் தெரியும்படிச் சில சங்கதிகள் சொல்லுவோம். இருப்புப்பாதை வேலைகள் நடத்துவதைப்பற்றி 1879ம் வருஷத்தில் ஏற்பட்டகூட்டம் இருப்புப்பாதை யாத்திரை செய்பவர்களுக்கு மிகவும் உபயோகமானது. இருப்புப் பாதை உத்தியோகஸ்தர்கள் சிலசமயங்களில் பிரயாணிகளை நியாய விரோதமாகவும் கொடுமையாயும் நடத்தும்படியாகிறது. இருப்புப் பாதைச் சங்கத்தாருக்குக்கூட இந்த அபவாத முண்டு. ஏனெனில்' சில சமயங்களில் அவர்களும் கவர்ன்மெண்டாருடைய நிபந்தனைகளைப் பிரசுரப்படுத்தாமல் அவற்றுக்குப் பிரதியாகத்தானேசொந்தமாய் உபநிபந்தனைகளை ஏற்படுத்தப் பிரயத்தனப் படுகிறார்கள்.

இக்காரணங்களைப்பற்றி, இருப்புப்பாதை வண்டியிலேறிப் பிரயாணம் போகிரவர்கள் அனைவரும் அடியில் நாம்சொல்லுகிற விதிகளைத்தெரிந்துகொண்டால்மிகவும் அனுகூலமாகவிருக்கும். வண்டியில் பிரயாணம் போகும்போது, நடுவழியில் டிக்கட்டு என்கிற சீட்டுகாணாமற்போனால் அப்பொழுதுதான் பிரயாணிகள் இருப்புப் பாதை உத்தியோகஸ்தர் கையி லகப்பட்டுக்கொண்டு உபத்திரவப் படுவது விசேஷம்; இப்படிப்பட்ட விஷயங்களில் அவர்களுடைய சட்டம் இத்தன்மையது என்று தெரிந்திருக்கவேண்டும். இதுவரையில் இப்படிப்பட்ட வில்லங்கத்தில் யாவரும் சங்கடப்படுவதற்கு மேற்படி சட்டத்தின்போக்கு இன்னதென்று அறிந்துகொள்ளாமையே காரணமாம். பிரயாணிகளிடத்தில் டிக்கட்டு இல்

லாமற்போனால் அப்பொழுது அவர்கள் ஏறிச்செல்லுகிற வண்டித் தொடர் எங்கிருந்து புறப்பட்டதோ அந்த இடத்திலிருந்து கட்ட வேண்டிய கட்டணம் எவ்வளவோ அவ்விளவும் பிரயாணியிடத்தில் இதுவரையில் வழக்கமாய் வாங்கிவருகிறார்கள்.

இந்த ஏற்பாடு சட்டத்திற்கு முழுதும் விரோதமானது. ஒரு பண்டிதரான நியாயாதிகாரி சொல்லியிருக்கிறபடி, துரைத்தனத்தார் செய்தசட்டத்தை இருப்புப்பாதைச் சங்கத்தாருடைய உபநிபந்தனை மாற்றமாட்டாதாகையால், பிரயாணி ஒருவன் கிரமமாய் வண்டி ஏறிவந்த தூரத்தைப் பார்க்கிலும், அதிகமான தூரத்திற்குக் கட்டணம் செலுத்தும்படி ஒருவனை ஒருபோதும் நிர்பந்திக்க இடமில்லை. ஆயினும், அப்படி அவர்கள் அதிகமான தூரத்திற்குக்கட்டணம் கேட்பது அநியாயம் என்கிற உண்மை தெரியாமையாலும் தெரிந்தாலும் வியவஹார விஷயத்தில் எவ்வளவு பொருள் வேண்டுமானாலும் செலவழிக்கச் சக்தியுள்ள சங்கத்தாருடன் போராட நம்மாலாகாதே என்கிற நிராசையாலுமே பலர் அவர்கள் கேட்ட தொகையைக்கொடுத்துவிட்டுக் குறை சொல்லிக்கொண்டு போய்விடுகிறார்கள். சட்டமோ இது விஷயத்தில் நடக்கவேண்டுவது இப்படி என்று தெளிவாகத்தெரிவிக்கின்றது. அதாவது இருப்புப்பாதை உத்தியோகஸ்தர்கள் எப்போது காட்டச்சொன்னாலும் அப்போது டிக்கட்டுகளைக் காட்டவேண்டும் கொடுக்கச்சொல்லிக்கேட்டால் கொடுத்துவிட வேண்டும். டிக்கட்டுகையில் இல்லாத பட்சத்தில் புறப்பட்ட விடத்திலிருந்து அவ்விடத்திற்குக் கட்டணம் எவ்வளவோ அதைச் செலுத்தி விடவேண்டும். அதுவுமில்லாவிட்டால் தம்பெயரும் விலாசமும் தெரிவிக்கவேண்டும். என்பதே சட்டத்தின் கருத்து.